## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

முன்னிலை:- திருமதி வி.கீதா, பி.ஏ.,எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2021-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 05-ம் நாள் திங்கட்கிழமை

**அசல் வழக்கு எண்: 9/2021**

பழனிச்சாமி ....வாதி

-எதிர்-

மூர்த்தி ...பிரதிவாதி

இந்த வழக்கானது கடந்த 29.3.2021 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.சாந்தி, அவர்கள் முன்னிலையாகி, பிரதிவாதி நீதிமன்றம் வருகையின்மையால் தோன்றா தரப்பினராக்கப்பட்டு, வாதி தரப்பை கேட்டறிந்து வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.....

### தீர்ப்புரை

கடனுறுதிச் சீட்டின் அடிப்படையில் வாதிக்கு, பிரதிவாதியிடமிருந்து அசல் தொகை ரூ.70,000/- மற்றும் பின்வட்டி சேர்த்து ரு.94,874-ஐ செலவுத்தொகையுடன் பெறவேண்டி வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 2. வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்:

வாதியிடம் பிரதிவாதி தனது குடும்ப செலவிற்கும், சில்லறை கடன்களை பைசல் செய்யவும் கடந்த 25.1.2018 அன்று வாதியிடம் பிரதிவாதி வழக்கு கடனுறுதிச் சீட்டை எழுதிக்கொடுத்து ரூ.70,000/- கடனாக பெற்றுக் கொண்டு அதற்கு 12 சதவிகிதம் வட்டி கொடுப்பதாகவும், விரைவில் கடனை பைசல் செய்துவிடுவதாகவும் ஒப்புக்கொண்டார் என்றும், மேற்படி பிராமிசரி நோட்டுப்படி கூடிய அசல் வட்டித்தொகை கொடுத்து பைசல் செய்யும்படி வாதி பலமுறை கேட்டும், பிரதிவாதி கடனை திருப்பி தரவில்லை என்றும், 4.1.2021 அன்று வாதி தனது வழக்கறிஞர் மூலமாக பதிவஞ்சல் அறிவிப்பு கொடுத்தும் பிராமிசரி நோட்டுப்படி கூடிய அசல் வட்டித்தொகையை கொடுத்து கடனை பைசல் செய்யும்படி கோரினார் என்றும், மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிரதிவாதி பதில் ஏதும் கொடுக்கவில்லை என்றும் மேற்படி தாவா பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்த தேதியிலிருந்து முன்று வருட காலத்திற்குள் அறிவிப்பு கொடுத்து இவ்வழக்கு தாக்கல்

செய்யப்பட்டுள்ளதால் வழக்கிற்கு காலாவதியினால் பாதிப்பு எதுவும் இல்லை என்றும், பிரதிவாதி Madras Act- 4/1938ன்படி விவசாயி அல்ல. தற்போது அசல் வட்டியுடன் சேர்த்து ரூ.94,874- வரவேண்டியுள்ளது, எனவே, தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. இந்த வழக்கில் பிரதிவாதிக்கு நீதிமன்றம் மூலம் அழைப்பாணை அனுப்பியும் பிரதிவாதி நீதிமன்றம் வருகையின்மையால் தோன்றாதரப்பினராக கருதப்பட்டுள்ளார்.

4. இந்த வழக்கில் வாதி வா.சா.1ஆக விசாரணை செய்யப்பட்டு, வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

**5.** அசல் வழக்கில் பிரதிவாதி தோன்றா தரப்பினராக்கப்பட்டார் என்றாலும், வாதி தனது வழக்கினை நிருபனம் செய்ய கடமைப்பட்டவர் ஆவார். வாதி தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், கடந்த 25.1.2018 அன்று வாதியிடம் பிரதிவாதி வழக்கு கடனுறுதிச் சீட்டை எழுதிக்கொடுத்து ரூ.70,000-00ஐ பெற்றுக் கொண்டார் என்றும், இதற்கு 12% வட்டி கொடுப்பதாகவும், விரைவில் கடனை பைசல் செய்துவிடுவதாகவும் ஒப்புக்கொண்டார். பலமுறை கேட்டும் பணத்தை திருப்பி கொடுக்காததினால் 13.08.2018 அன்று வழக்கறிஞர் மூலமாக பதிவஞ்சல் அறிவிப்பு கொடுத்தும் தொகை பைசலாகவில்லை. தற்போது அசல் வட்டியுடன் சேர்த்து ரூ. 94,874- வரவேண்டியுள்ளது என்று வாதிட்டார்.

6. இதனை அனுசரித்து வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு முதன்மை சாட்சியத்திற்கான பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்து வழக்குரையின் சங்கதிகளுக்கேற்ப சாட்சியம் அளித்து 25.1.2018 தேதியிட்ட வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த பிராமசரி நோட்டு வா.சா.ஆ.1 ஆகவும், 4.1.2021 அன்று பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.2 ஆகவும், பிரதிவாதி மேற்படி அறிவிப்பை பெற்றுகொண்டதற்கான ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ.3 ஆகவும், குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதியின் தரப்பு சங்கதிகளை, மறுக்கும் வகையில் பிரதிவாதி இந்த நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க முன் வரவில்லை. எனவே. வாதி வா.சா.1ன் சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களிலிருந்து பிரதிவாதி வாதியிடம் இருந்து கடனுறுதி சீட்டின் அடிப்படையில் பணம் பெற்றுக்கொண்டதும், வாதி திரும்ப பணத்தை கேட்ட போது,

கடன் தொகையை திருப்ப செலுத்தவில்லை என்பதும் தெரிய வருகிறது. கடனுறுதி சீட்டை பொருத்தவரையில் வாதி உரிய காலக்கெடுவுக்குள் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி அதன் பின்னிட்டும் தொகை செலுத்தப்படவில்லை. எனவே வாதி வழக்குரையில் கோரியுள்ள தொகையை பிரதிவாதி செலுத்த கடமைப்பட்டவர் என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

இறுதியாக, இந்த வழக்கில் வாதி கோரியபடி, வாதிக்கு, பிரதிவாதி ரூ.94,874--ஐயும், அதில் அசல் தொகை ரூ.70,000-த்திற்கு இந்த வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் தீர்ப்பாணை தேதி வரை வருடத்திற்கு 9 சதவிகித வட்டியுடனும், அதன் பின்னர் தொகை முழுவதும் கொடுத்து பைசலாகும் வரை 6 சதவிகித பின்வட்டியுடனும் செலவுத் தொகையுடனும் சேர்த்து செலுத்தவேண்டுமென்று தீர்ப்புரை பிறப்பிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தர்-தட்டச்சரிடம் நேரில் சொல்லபட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2021-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 05-ஆம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-V.Geetha)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

**வாதி தரப்பு சாட்சி பட்டியல்:**

வா.சா.1 – பழனிசாமி (வாதி)

**வாதி தரப்பு சான்றாவணங்கள் பட்டியல் :**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | - | 25.1.2018 | கடனுறுதிச் சீட்டு |
| வா.சா.ஆ.2 | - | 4.1.2021 | வழக்கறிஞர் அறிவிப்பு |
| வா.சா.ஆ.3 | - | | ஒப்புதல் அட்டை |

**பிரதிவாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணம் :** இல்லை.

(Sd/-V.Geetha)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.